# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு
# 2010

# தமிழ்மொழி

## வகுப்புநிலை 4

நேரம்: 120 மணித்துளிகள்

சுட்டெண்: | | | | | | | | |

மொத்தப்புள்ளிகள் : 100

## 1) தரப்பட்டுள்ள சொற்களில் மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிந்து, கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. நாம் கற்கின்ற அளவுக்கு ______________________ பெருகும்.

   (ஆசை, அறிவு, பணம்)

2. தொல்காப்பியம் ஒரு சிறந்த ______________________ நூலாகும்

   (இலக்கிய, இசை, இலக்கண)

3. பாரதியாரின் கவிதைகள் ______________________ ஊட்டுகின்றன.

   (அச்சத்தை, பெருமையை, வீரத்தை)

4. வாழ்வில் உயர்வைத் தருவது ______________________.

   (புகழ், முயற்சி, சண்டை)

5. வளி என்றால் காற்று. வலி என்றால் ______________________.

   (ஒலி, பாதை, நோவு)

6. முழுமையாகப் பயன்படும் மரம் ______________________.

   (கொய்யா, பனை, மா)

7. பாற்பொங்கல் - இச்சொல்லைப் பிரித்து எழுதினால்,

   ______________________ என வரும்.

   (பா + பொங்கல், பாற் + பொங்கல், பால் + பொங்கல்)

8. நோயின்றி வாழ ______________________ இருத்தல் வேண்டும்.

   (அழுக்காக, தூய்மையாக, அழகாக )

9. நாம் ஒருவர் செய்த ______________________ மறக்கக் கூடாது .

   (நன்றியை, குற்றத்தை, தவறை )

10. கண்ணாடி வெய்யிலில் ______________________ என மின்னியது.

    (மளமள, சிலுசிலு, பளபள)

11. வீணைக்கொடியைக் கொண்ட மன்னன்

________________________.

(பண்டாரவன்னியன், எல்லாளன், இராவணன்)

12. தனி + திறமை - இச்சொல்லைச் சேர்த்தெழுதினால்,

________________________ என வரும்.

(தனிதிறமை, தனித்திறமை, தன்திறமை)

13. ஒரு பக்கம் மட்டுமே தோற்கண் உள்ள ஒரு முழவு ________________.

(முரசு, உடுக்கு, மேளம்)

14. இயற்கை தந்த கொடைகளில் ஒன்று ________________.

(பணம், வீடு, தாவரம்)

15. வீரர்கள் நாட்டுக்காகப் ________________ வீரச்சாவடைந்தனர்.

(போராடும், போராடு, போராடி)

16. உலகின் தொன்மை மிக்க மொழிகளில் ஒன்று ________________.

(ஆங்கிலம், சிங்களம், தமிழ்)

17. முயற்சி உடையார் இகழ்ச்சி ________________.

(உடையார், அடையார், நடையார்)

18. முக்கனிகளில் ஒன்று ________________.

(கொய்யா, அன்னாசி, வாழை)

19. மணமுரசு ________________ விழாவில் முழங்கிற்று.

(பிறந்தநாள், திருமண, தைப்பொங்கல்)

20. தமிழரின் மரபுவழி விளையாட்டுகளில் ஒன்று ________________.

(துடுப்பாட்டம், உதைபந்து, சிலம்பாட்டம்)

21. க் + ஊ எனும் ஒலிகளைச் சேர்த்தால் உருவாகும் ஒலி

________________________.

(கு, கூ, சூ)

22. பழனம் என்றால் ______________________ எனப் பொருள்படும்.

(வயல், தோட்டம், காடு)

23. மக்கள் நலம் பெற, அரசு ______________________ அமைதல் வேண்டும்.

(வல்லரசாக, நல்லரசாக, மெல்லரசாக)

24. பலனை எதிர்பார்த்து உதவி செய்தல் ______________________.

(நன்றன்று, வேண்டும், நல்லது)

25. உயிர்களிடத்தில் ______________________ இருப்போம்.

(வன்பாய், அன்பாய், வெறுப்பாய்)

26. நாற்பத்து நான்கு ஆண்டுகள் இலங்கையை ஆண்ட தமிழ்மன்னன் ______________________.

(சங்கிலியன், பண்டாரவன்னியன், எல்லாளன்)

27. பழந்தமிழ்க் கலைகளில் ஒன்று ______________________.

(பந்தாட்டம், கோலாட்டம், களியாட்டம்)

28. கனக விசயனைப் போரில் வென்ற தமிழ்மன்னன் ______________________.

(செங்குட்டுவன், நெடுஞ்செழியன், நெடுமாறன்)

29. உனது செயல்களை நீயே எண்ணிப் ______________________.

(பாராதே, பார், பாராதீர்)

30. அறிஞருடன் சேர்ந்தால் ______________________ பெறலாம்.

(பொருளைப், அறிவைப், பணத்தைப்)

(புள்ளிகள் 30)

**2) கீழே தரப்பட்டுள்ள சொல்லியங்களில், கீறிட்ட இடத்தை மிகப் பொருத்தமான சொல்லால் நிரப்புக.**

| | | |
|---|---|---|
| மளமள | அங்கும் இங்கும் | அள்ளஅள்ளக் |
| கையும்மெய்யுமாகப் | படபட | |

1. புறாக்கள் ______________ எனச் சிறகடித்துப் பறந்தன.

2. ஊர்க்காவலர் கள்வனைக் ______________ பிடித்தனர்.

3. மாணவன் பாடத்தை ______________ என வாசித்தான்.

4. ஆற்றுநீர் ______________ குறையாது.

5. வேகமாக வீசிய காற்றிலே மரங்கள் ______________ அசைந்தன.

(புள்ளிகள் 05)

**3) கீழே தரப்பட்டுள்ள சொற்களை வாழிடமொழியில் எழுதுக.**

1. விண்ணுந்து ______________

2. அன்பு ______________

3. பறவைகள் ______________

4. தேர்வு ______________

5. நள்ளிரவு ______________

(புள்ளிகள் 05)

**4) கீறிட்ட இடங்களில் பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதி, சொல்லியங்களை நிறைவு செய்க.**

1. சிறுவர்கள் பனியில் சறுக்கி

   ______________________________.

2. அறிவுள்ளவர்கள் அடக்கமாக

   ______________________________.

3. கிளித்தட்டு, கிட்டிப்புள் என்பவை தமிழர்களால்

   ______________________________.

4. தமிழைச் செந்தமிழ் எனப்

   ______________________________.

5. மாமா எழுதிய அஞ்சல் நேற்றுக்

   ______________________________.

(புள்ளிகள் 10)

**5) மாறியிருக்கும் சொற்களை ஒழுங்குபடுத்தி, கருத்துள்ள சொல்லியமாக்குக.**

1. காலம் / சென்றது / சிங்கத்திடம் / தாழ்த்திச் / முயல்

   ______________________________________________

2. படைமுரசு / அழைத்தனர் / போர்முரசைப் / என்றும்

   ______________________________________________

3. சிறுமியை / நடித்தது / பாட்டியாக / நரி / ஏமாற்றப்

   ______________________________________________

4. செய்தார்/ தொண்டு / தாமோதரனார் / தமிழுக்குத்

______________________________________________

5. தமிழைத் / தீந்தமிழ் / போற்றுவர் / என்று / புலவர்கள்

______________________________________________

(புள்ளிகள் 05)

## 6) கீழே தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுக்கு விடை தருக.

1. இளங்கோஅடிகளால் எழுதப்பட்ட நூல் எது?

______________________________________________

2. திருகோணமலைக்கு வேறொரு பெயர் தருக.

______________________________________________

3. அந்தரத்தில் பறக்கும் பறவையல்ல. அழகான வால் உண்டு, அணிலும் அல்ல. அது எது?

______________________________________________

4. தமிழர் மரபுவழி விளையாட்டு ஒன்று தருக.

______________________________________________

5. வடகம் எதில் செய்யப்படுகிறது?

______________________________________________

(புள்ளிகள் 10)

**7) தரப்பட்டிருக்கும் சொற்களில் மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| நன்றாகப் | கற்றுக் | பகிர்ந்து | குஞ்சுகள் | அமர்ந்தது |

மரத்தின் கிளையில் ஒரு குருவிக்கூடு. அதற்குள் நான்கு அழகான ____________________. அவற்றுக்குச் சிறகுகள் முளைக்காததால் தத்தித் தத்திக் கூட்டுக்குள்ளேயே விளையாடின. அவை கீச்கீச் எனும் ஒலி எழுப்பி மகிழ்ச்சியைக் காட்டின. இரை தேடச் சென்ற தாய்ப்பறவை கூட்டில் வந்து ____________________. வாயில் வைத்திருந்த இரையைக் குஞ்சுகளுக்கு ஊட்டியது. தாய் தரும் இரையைப் பெற, குஞ்சுகள் ஒன்றுடன் ஒன்று போட்டி போட்டன. எனினும் தாய்ப்பறவை எல்லாக் குஞ்சுகளுக்கும் இரையைப் ____________________ கொடுத்தது. சில நாட்களின் பின் குருவிக் குஞ்சுகளுக்குச் சிறகுகள் முளைத்தன. அவை தாயிடம் பறக்கக் ____________________ கொண்டன. பின்னர் அவை ____________________ பறக்கத் தொடங்கின. தாய்ப்பறவை பறந்து செல்லும் தன் குஞ்சுகளைப் பார்த்து மகிழ்ந்தது.

(புள்ளிகள் 10)

## 8) தரப்பட்டுள்ள வினாக்களுக்கு முழுவிடை தருக.

கோடைவிடுமுறை வந்தது. குந்தவைக்கு ஒரே மகிழ்ச்சி! அவள் தன் பெற்றோருடன் இந்தியாவுக்குச் சுற்றுலாச் சென்றாள். தமிழகத்தில் இருந்த போது அவள் எழுதிய நாட்குறிப்பில் ஒருநாள்:

**07.07.2009**

நான் இன்று திருவள்ளுவர் சிலையைப் பார்க்கச் சென்றிருந்தேன். அச்சிலை கன்னியாகுமரியில் இருப்பதாக நான் தமிழ் வகுப்பில் படித்தேன். திருவள்ளுவரைப் பற்றி, திருக்குறளைப் பற்றி நிறையவே படித்திருக்கிறேன். அவரது சிலையைப் பார்ப்பதற்கு மிக ஆவலாக இருந்தேன். நண்பகல் வேளை சிலையிருக்கும் இடத்தை அடைந்தோம். தலையை நிமிர்த்திப் பார்த்தேன். எவ்வளவு உயரமான சிலை! எனக்கு மிக வியப்பாக இருந்தது. உலகப் புகழ்பெற்ற திருக்குறளை எழுதியவர் சிலையல்லவா! இன்றைய நாள் எனக்கு மகிழ்ச்சியான, மறக்க முடியாத ஒரு நாள்.

1. குந்தவை எங்கே சுற்றுலாச் சென்றாள்?

______________________________________________.

2. குந்தவை எதைப் பார்க்கச் சென்றிருந்தாள்?

______________________________________________.

3. திருவள்ளுவர் சிலை எங்கே இருக்கிறது ?

______________________________________________.

4. குந்தவையின் வியப்புக்குக் காரணம் என்ன?

______________________________________________.

5. குந்தவைக்கு அன்றைய நாள் ஏன் மகிழ்ச்சியான நாளாக அமைந்தது?

______________________________________________.

(புள்ளிகள் 10)

9) தரப்பட்டுள்ள படத்தை வைத்து, 30 சொற்களுக்குக் குறையாமல் கதை எழுதுக.









(புள்ளிகள் 15)